# நமது பாடசாலை சமூகம்

## இணைவாய்ச் செயலாற்றுவது இன்னும் நலம்!

பாடசாலைப் படிப்பைக் குழந்தைகள் உற்சாகமாகத் துவங்க உதவுவோம்!



## எமது பாடசாலையானது:

- உங்களையும் எமது பாடசாலையின் அங்கத்தவர்களாகக் கருதி உங்களது ஈடுபாட்டினை ஊக்குவிக்கும்
- அனைத்து மாணவர்களும் வெற்றிகரமான முறையில் படிப்பவர்கள் என்ற கண்ணோட்டத்தில் அவர்களைப் பார்க்கும்
- உங்களது பிள்ளையின் ஆற்றல்கள், ஊக்கங்கள் மற்றும் ஆர்வங்களை மதிக்கும்
- பாடசாலைக் கல்விக்கு முன்பாக உங்களது பிள்ளை கற்றுக்கொண்டுள்ள அனுபவங்களை மதிக்கும்
- பாடசாலை நடவடிக்கைகளில் பங்குபற்ற உங்கள் குடும்பத்தினரை அழைக்கும்
- உங்கள் குடும்பத்தினரை வரவேற்கக் காத்திருக்கும்.

## குடும்பங்களுக்கான யோசனைக் குறிப்புகள்:

- உங்கள் பிள்ளைக்கு ஆதரவாக இருக்க ஆயத்தமாயிருங்கள்.
- பாடசாலைக் கல்வியை ஆரம்பிப்பதைப் பற்றிய உங்கள் பிள்ளையின் எண்ணங்கள் என்ன என்பதைச் செவிமடுத்துக் கேளுங்கள்.
- உங்கள் பிள்ளையுடன் சேர்ந்து பேசவும், வாசிக்கவும், விளையாடவும், ஓய்வாக இருக்கவும் நேரம் ஒதுக்குங்கள்.
- பாடசாலையைப் பற்றி உங்களுக்கு இருக்கும் நல்ல எண்ணங்களைப் பகிர்ந்துகொள்ளுங்கள்.
- புதிய பழக்கவழக்கங்களைக் கற்றுக் கொடுங்கள்.
- கடினமான வேலை ஒன்றை உங்கள் பிள்ளை செய்ய முயற்சிக்கும்போது அதை ஊக்குவியுங்கள்.
- உதவிகளைப் பெறுவதில் உங்களது பிள்ளைக்கு ஒத்தாசையாக இருங்கள்.
- பாடசாலையின் முதலாம் நாளுக்கு முன்பாக புதிய குழந்தைகளையும் அவர்களது பெற்றொர்களையும் சந்தியுங்கள்.
- பாடசாலைக் கல்வியின் துவக்கத்தினை மகிழ்வாய்க் கொண்டாடுவீராக!

**பாடசாலைக் கல்விக்கு உங்கள் பிள்ளை மாறியிருப்பதைப் பற்றிக் கலந்துரையாட எம்முடன் தொடர்புகொள்ளுங்கள்.**

www.qld.gov.au/transitiontoschool

*Language: Tamil*

160233

Queensland Government